செ.வெ.எண்:56 நாள்:28.12.2017

# பத்திரிக்கைச் செய்தி

## தென்னை மரத்திலிருந்து நீரா பானத்தை உற்பத்தி செய்ய அனுமதி வழங்கி தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் தகவல்

**நீரா உற்பத்தி:**

தமிழ்நாட்டில் சுமார் 8 கோடி தென்னை மரங்கள், 10 இலட்சத்து 74 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அதில் இந்திய அளவில் தேங்காய் உற்பத்தியிலும், உற்பத்தி திறனிலும், முன்னனி வகிக்கும் தமிழ்நாட்டில் தென்னை விவசாயிகள் தங்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்வதற்காக தென்னை மரத்திலிருந்து நீரா பானத்தை இறக்கி, பதப்படுத்தி விற்பனை செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

“நீரா” என்பது தென்னை மரங்களில் மலராத தென்னம்பாளையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஒரு பானமாகும். நொதிக்காத வகையில் உற்பத்தி செய்யப்படும் இந்த பானம், ஆல்கஹால் இல்லாத, இயற்கையான ஊட்டச்சத்து பானமாகும். நீரா பானத்தில, வைட்டமின் ஏ, பி, சி அனைத்தும் ஒருங்கே கிடைக்கிறது. உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படும் தாது உப்புகளும் நிறைந்து காணப்படுகிறது.

தென்னை வளர்ச்சி வாரியத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட நொதிப்பு எதிர்ப்புத் திரவத்தைப் பயன்படுத்துவதால், “நீரா” பானம் நொதிக்காமல் இயற்கைச் சுவை மாறாமல் நீண்டநாள் சேமித்துப் பயன்படுத்தலாம்.

மேலும், நீரா பானத்தைப் பயன்படுத்தி, நீரா சர்க்கரை, நீரா வெல்லம், நீரா தேன், நீரா லட்டு, நீரா கேக் போன்ற மக்கள் உடல் நலத்துக்கு உகந்த பொருட்களைத் தயாரிக்க இயலும். இந்தப் பொருட்கள் சர்க்கரை நோயாளிகளுக்கும் உகந்ததாகும்.

கடந்த 19.04.2017 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில் சென்னை தலைமைச்செயலகத்தில் நடந்த கூட்டத்தில் தென்னை வளர்ச்சி வாரியம்,

தமிழக அரசினால் அனுமதிக்கப்பட்ட தென்னை விவசாயிகள் சங்கம், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தென்னை உற்பத்தியாளர் இணையம் மூலம் மட்டுமே நீரா உற்பத்தி செய்ய விண்ணப்பிக்கலாம். இதற்கான உரிமம் (லைசன்ஸ்) வழங்கும் அதிகாரி தகுதி உள்ளவர்களுக்கு, நீரா உற்பத்தி செய்ய அனுமதி வழங்குவார். உரிமம் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமம் (லைசன்ஸ்) ஒவ்வொரு நிதியாண்டின் இறுதி வரை செல்லத்தக்கது. அதன் பிறகு மார்ச் 31ந்தேதிக்குள் மீண்டும் உரிமத்தை (லைசன்ஸ்) புதுப்பித்துக் கொள்ளலாம். ஏதாவது விதி மீறலில் ஈடுபட்டால் உரிமம் (லைசன்ஸ்) ரத்து செய்யப்படும். சோதனை அதிகாரிகளால் வருவாய் துறை அலுவலர்கள் (தாசில்தார் பதவிக்கு இணையானவர்கள்) அல்லது உரிமம் வழங்கும் அதிகாரி /துணை ஆணையர்/உதவி ஆணையர் /மதுவிலக்கு அலுவலர் காவல் துறை அலுவலர் (ஆய்வாளர் பதவிக்கு இணையானவர்கள்) அவ்வப்போது சோதனை நடத்துவார்கள்.

தமிழக அரசின் இத்தகைய நடவடிக்கையால், தென்னை விவசாயிகளின் வாழ்வு வளம் பெறும் வகையில் நீரா பானத்திற்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**